<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.370/2021</u>
<u>நாள்.23.12.2022</u>

2022ம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதி ஜெயலதா என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S.ராஜுவ்காந்தி, இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==============================================================

| | |
|---|---|
| பெயர் = ஜெயலதா | தகப்பனார் பெயர்= ராஜகோபால் |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = 57 |

==============================================================

**<u>PW 1 மு.வி</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.1, 04.03.1994 தேதியிட்ட திருமண கட்டண ரசீது உண்மை நகல் வா.சா.ஆ.2, நானும், எனது கணவரும் திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் மற்றும் சிடி வா.சா.ஆ.3, 06.09.2021 தேதியிட்ட குடும்ப அட்டை கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4, 09.06.2021 தேதியில் இறந்துபோன எனது கணவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5,

04.09.2021 தேதியிட்ட வட்டாட்சியருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு கொடுத்த மனுவின் கை நகல் மற்றும் தபால் ரசீது வா.சா.ஆ.6, மேற்படி தேதியில் கிராம நிர்வாக அலுவலருக்கு கொடுத்த மனுவின் கை நகல் மற்றும் தபால் ரசீது வா.சா.ஆ.7, 07.09.2021 தேதியிட்ட வட்டாட்சியர் மேற்படி மனுவை பெற்றுக்கொண்டதற்கான கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.8, மேற்படி தேதியில் கிராம நிர்வாக அலுவலர் மனுவை பெற்றுக்கொண்டதற்கான கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.9, 13.10.2021 தேதியிட்ட மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் வழங்கிய மேலெழுத்து அசல் வா.சா.ஆ.10, 21.10.2021 தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலம் வட்டாட்சியருக்கு நான் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.11, மேற்படி அறிவிப்பை வட்டாட்சியர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)